# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101959

1. District : மாவட்டம் Coimbatore PS: காவல்நிலையம் VRAC Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 3/2023/AC/CB Date: நாள் 24.5.2023

2. (i) Act சட்டம்: The Prevention of Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Corruption Act 1988 as Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: amended by the Prevention Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : of Corruption (Amendment) Act 2018

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 18.5.2023 Date to : நாள் வரை 23.5.2023
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 1430 Time to : நேரம் வரை 1135
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.5.2023 Time நேரம் 1030
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.5.2023 Time நேரம் 1030

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் approx. 8 Kms from South west
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Food Safety officer office, Thadagam Road, RS puram, Coimbatore
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Durai Samy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் D. Ramdass
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 78/23 (d) Nationality நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Retailer Grocery Shop (g) Address : முகவரி DNO:57, Vellingiri Nagar, Navavoor pirivu, Maruthamalai Road, Bharathiar university (PO), Covai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tr. Venkatesh, Food Safety Officer, and his assistant.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheets enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
R. [signature] 24.5.2023

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 24/5/2023

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.5.23 at 1230 hrs

Name: பெயர் E. LATHA
Rank: நிலை INSPECTOR OF POLICE VAC, COIMBATORE. No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2023/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி

இன்று 24.05.2023 ஆம் தேதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.லதா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாவட்டம், மருதமலை ரோடு, நவாவூர் பிரிவு, வெள்ளிங்கிரி நகரில் கதவு எண்.57 ல் வசிக்கும் ராம்தாஸ் என்பவரது மகன் R.துரைசாமி, வயது–78 என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புனர் R.துரைசாமி, வயது–78, த/பெ.D.ராம்தாஸ், கதவு எண்.57, வெள்ளிங்கிரி நகர், நவாவூர் பிரிவு, மருதமலை ரோடு, பாரதியார் பல்கலைகழகம் போஸ்ட், கோவை. பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோவை. அய்யா, நான் கோவை மாவட்டம், மருதமலை ரோடு, நவாவூர் பிரிவு, வெள்ளிங்கிரி நகரில் கதவு எண்.57 ல் உள்ள எனது சொந்த வீட்டில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணமாகி மூன்று மகன்கள் உள்ளார்கள். தற்போது என்னுடன் எனது முதல் மகன் D.பாலாஜியும், மூன்றாவது மகன் D.கார்த்திசனும் வசித்து வருகிறார்கள். எனது இரண்டாவது மகன் D.குமரேசன் திருநெல்வேலி மாவட்டத்தில் அவரது குடும்பத்துடன் இருந்து வருகிறார். நான் சொந்தமாக சரஸ்வதி ஸ்டோர் என்ற பெயரில் இரண்டு மளிகை கடைகளை வைத்து சில்லறை வியாபாரம் செய்து வருகிறேன். அதில் ஒரு மளிகை கடை நான் இருக்கும் வீட்டின் கீழ்தளத்திலும், மற்றொன்று அருகிலும் உள்ளது. மேற்படி கடைகளை நானும் எனது இரண்டு மகன்களும் கவனித்து வருகிறோம். கடந்த 2022 ஆம் வருடம் உணவுபாதுகாப்பு அதிகாரி வெங்கடேஷ் அவர்கள் அவரது உதவியாளருடன் என் கடைக்கு வந்து மேற்படி எனது இரண்டு மளிகை கடைகளுக்கும் FSSAI லைசன்ஸை கடைகளுக்கு கட்டாயம் பெற வேண்டும் என்றும் அதனை கம்ப்யூட்டர் ஆன்லைனில் பதிவு செய்து எடுக்க வேண்டும் என்று தெரிவித்து, அதனை அவர்களே செய்து கொடுத்து விடுவதாக சொல்லி புகைப்படம் மற்றும் பதிவு செய்வதற்கு உண்டான ஆவணங்களை எங்களிடமிருந்து பெற்று சென்று பதிவு செய்து கொடுத்தார்கள். அந்த பதிவு சான்றிதழ்களின் பதிவு எண்.12422003001123 மற்றும் 22422554000114 ஆகும். அதை எங்கள் கடைகளில் மாட்டி வைத்திருந்தேன். பின்னர் கடந்த மார்ச்

மாத கடைசியில் எங்கள் மளிகை கடைக்கு வந்த உணவு பாதுகாப்பு அதிகாரி வெங்கடேஷின் உதவியாளர் எங்களிடம் உங்கள் லைசன்ஸ் டைம் முடிய போகுது என்றும் அதனை புதுப்பிக்க ஆன்லைனில்தான் அப்ளை செய்ய வேண்டும் என்று சொல்ல அப்போது என்னுடன் இருந்த என் மகன் பாலாஜி சரி நாங்க ஆன்லைனில் அப்ளை பண்ணி விடுகிறோம் என்று கூறினார். அதற்கு அவர் உங்களால் செய்ய முடியாது நான் தான் செய்ய முடியும் என்றும், என்னுடைய போன் நம்பர் 9940331512 க்கு தான் மெசேஜ் வரும் என்றும் உங்க கடைகளுக்கு வெங்கடேஷ் சார் தான் புதுப்பித்து லைசன்ஸ் தருவார் என்று கூறி, அதற்கு பீஸ் ரூ.3000/– ஆகும் என்றும் என்னிடம் பெற்று கொண்டார். மேலும் ஒவ்வொரு கடைக்கும் பணம் ரூ.5000/– வீதம் மொத்தம் ரூ.10,000/– தனியாக அதிகாரி வெங்கடேஷ்க்கு கொடுக்க வேண்டும் என்று கூறி எங்க கடையில் வைத்திருந்த லைசன்ஸ்களை புதுப்பித்து தருவாக சொல்லி வாங்கி சென்று விட்டார். பின்னர் இரண்டு நாள் கழித்து என் கடைக்கு வந்த உதவியாளர் என்னிடம் பணம் ரெடி செய்து விட்டீர்களா என்று கேட்டார். அதற்கு நான் அவ்வளவு பணம் தாமுடியாது என்று சொல்ல நீங்க ஆபீஸ் வந்து உணவு பாதுகாப்பு துறை அதிகாரி வெங்கடேஷ் அவர்களை பாருங்க என்று கூறிவிட்டு சென்றுவிட்டார். அதன்பின்பு ஒரு திங்கட்கிழமை அதிகாரி வெங்கடேஷ் அவர்களை பார்க்க தடாகம் ரோடு, ஆர்.எஸ்.புரத்தில் உள்ள அவரது அலுவலகத்திற்கு சென்றபோது அவர் அங்கு இல்லை, கோர்ட்டுக்கு போய் இருப்பதாக சொன்னதால் நான் திரும்ப வந்து விட்டேன். பின்னர் கடந்த 10 நாள் முன்னாடி எங்கள் கடைக்கு வந்த மேற்படி உதவியாளர் நீங்க வந்து ஏன் இன்னும் அதிகாரியை பார்க்கல, அவரை பார்த்தால் தான் கடை லைசன்ஸ் புதுப்பித்து தருவார். நீங்க சாரை போய் நேரா பாருங்க என்று சொல்ல, நான் கடந்த 18.05.2023 ஆம் தேதியன்று மதியம் சுமார் 02.30 மணிக்கு உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம் சென்று உணவு பாதுகாப்பு அதிகாரி வெங்கடேஷ் அவர்களை பார்த்து என்னுடைய கடைகளுக்கான லைசன்ஸ் பற்றி கேட்டேன். அதற்கு அவர் பணம் கொடுத்தீட்டிங்களா என்று கேட்டார். ஏற்கனவே புதுப்பிக்க பீஸ் ரூ.3,000/– ஐ உதவியாளரிடம் கொடுத்துவிட்டேன். மேலும் தாங்கள் இரண்டு கடை லைசன்ஸ் புதுப்பித்து தருவதற்கு பணம் ரூ.10,000/– கேட்பதாக உதவியாளர் கூறுகிறார் என்று சொன்னேன். அதற்கு அவர் இரண்டு கடைக்கு அரசாங்க பீஸ் ரூ.4,000/– வரும் நாங்க குறைச்சு போட்டு ரூ.3,000/– வாங்கியிருக்கிறோம். நீங்க தீபாவளி பொங்கலுக்கு எதுவும் எங்களுக்கு செய்ததில்லை, அதனால பாத்து கௌரமாக செய்யுங்க என்று சொன்னார். நான் சிறிய கடை தான் வைத்துள்ளேன். பாத்து

கொஞ்சம் பணத்தை குறைத்து சொல்லுங்க என்று கூறினேன். அவர் மேஜை மேல் வைத்திருந்த என்னுடைய ஒரு கடைக்கு மட்டும் புதுப்பித்த லைசன்ஸ் 22422554000114 ஐ எடுத்து என்னிடம் கொடுத்துவிட்டு இந்த லைசன்ஸ்க்கு பணம் ரூ.2000/– மும் இன்னொரு லைசன்ஸ்சை புதுப்பிக்க ரூ.5000/– மும் மொத்தம் ரூ.7000/– ஐ உதவியாளரிடம் கொடுத்துவிட்டு வாங்கிட்டு போங்க என்று சொல்லி அனுப்பிவிட்டார். பின்னர் நேற்று 23.05.2023 ஆம் தேதி காலையில் வெங்கடேஷ் அவர்களின் உதவியாளருக்கு அவரின் போன் நம்பர் 9940331512 க்கு போன் செய்து லைசன்ஸ் ரெடியாகிவிட்டதா என்று கேட்டேன். அதற்கு வெங்கடேஷ் சார் கேட்ட பணம் ரூ.7,000/– ஐ கொடுத்தால் தான் லைசன்ஸை புதுப்பித்து கொடுப்பார் பணத்தை ரெடி பண்ணிட்டு வாங்க என்று சொல்லி போனை வைத்துவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுத்து மேற்படி வேலைகளை முடிக்க விருப்பமில்லை. எனவே என்னிடம் ஏற்கனவே புதுபித்து கொடுத்த ஒரு கடைக்கு உண்டான லைசன்ஸ்க்கு ரூ.2000/– மும், இன்னொரு கடைக்கு லைசன்ஸ்சை புதுப்பிக்க ரூ.5000/– மும் மொத்தமாக ரூ.7000/– ஐ லஞ்சமாக கேட்கும் கோவை உணவு பாதுகாப்பு அதிகாரி வெங்கடேஷ் மற்றும் அவருக்கு உடந்தையாக இருக்கும் அவருடைய உதவியாளர் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுகொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/ (R.துரைசாமி, 24.5.2023) இடம் – கோவை, நாள் – 24.05.2023. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரிகளின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 24.05.2023 ம் தேதி காலை 11.30 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2023/AC/CB u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரிகள் திரு.வெங்கடேஷ், உணவு பாதுகாப்பு அதிகாரி, உணவு பாதுகாப்பு அலுவலர் அலுவலகம், தடாகம் ரோடு, ஆர்.எஸ்.புரம், கோவை மற்றும் அவரது உதவியாளர் ஆகியோர்கள் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Sir, Received the Complaint on 24.5.2023 at about 10.30 hrs Sd/- x-x-x-x 24/5/2023 (C.LATHA), Inspector of Police, V&AC, Coimbatore. Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore

V&AC Cr.No.3/2023/AC/CB u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 24.5.2023 at 11.30 hrs. Sd/- x-x-x-x 24/5/2023 (C.LATHA), Inspector of Police, V&AC Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

24/5/2023

(C.லதா)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.